Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ ஆனி மீ ௧0 உ வெள்ளிக்கிழமை (24 JUNE. 1955) [இல - கஉ]

காப்பியக் கலைக்கா

## பதினைந்து படலங்களிலும் படிப் படியாகப் பரந்த பாவிகப் பண்பு

### சுந்தரகாண்டம் சுவைதரச் சுட்டும் தூய வனப்பு

#### சுந்தரப் பெயரும் மந்திரக் கவிதையும்

( இறுவாய் )

ஆகச் சுந்தர காண்டத்தின் பதினைந்து படலங்களும் இதுவரை மிகச்சுருங்கிய முறையில் விமர்சிக்கப் பட்டன. சுந்தரகாண்டம் என்ற பெயர்ப்பொருளாகிய சௌந்தரிய இயைபு அந்தப் பதினைந்து படலங்களின் அமைப்பிலும் பொருளிலும் சம்பவத்திலும் அமைந்திருக்கக் கண்டோம். இராமாயணத்தின் காவிய குணம் சுந்தர காண்டத்திலேதான் பொருந்தியிருக்கிறதென்று வெளிப்படையாக அறியலாம்.

பாவிகமென்பது காப்பியப் பண்பே"
தண்டியலங்காரம்.

"விளம்பிய காப்பியக் குணங்கள் பாவிகமே"
மாறனலங்காரம்

என்று அலங்கார நூல்கள் காவியத்தின் தொகுதியான குணத்தைப் பாவிகம் என்னும் அலங்காரமாகக் கூறுகின்றன. சுந்தரகாண்டத்திற்கு மேலேதான் இராம இராவண யுத்தம் ஆரம்பமாகிறது. சத்தியத்துக்காகவும் நேர்மைக்காகவும், தர்மத்துக்காகவும் போராடிய போராட்டமே அந்த யுத்தம். யுத்தத்திற்கு முன்பு பிராட்டி இருக்கின்ற இடத்தை இலங்கையிலிருந்து விவரமாக அனுமன் வந்து உரைப்பது முதலிய நிகழ்ச்சிகள் சுந்தரகாண்டத்தைச் சேர்ந்தவை. எந்த சத்தியத்துக்காகவும் நியாயத்துக்காகவும் தர்மத்துக்காகவும் போர் நடக்கப் போகிறதோ அதே சத்திய நியாய தர்மங்களின் பூர்ண சௌந்தரியத்தைச் சுந்தரகாண்டத்தில் வெளியிடை மலை போல விளக்கமாகக் காண்கிறோம். கடல் தாவு படலம் முதல் திருவடி தொழுத படலம் இறுதியாக உள்ள பதினைந்து படலங்களுக்கு கூடிய ஆயிரத்து முந்நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளை உடைய தொகுதியே கம்பனுடைய சுந்தரப்பொழில். சுந்தர காண்டத்தில் உள்ள ஒவ்வோர் கவிதையும் மந்திர சக்தி வாய்ந்தது. தெய்வீக அழகும் ஆற்றலும் பொருந்தியது சுந்தரகாண்டப் பாராயணம் வரப்பிரசாத பலன் தரக்கூடியது. புண்ணிய காலமாகிய இந்த தனுர் மாதத்தில் காலை

—மதுரை—
திரு நா. பார்த்தசாரதி

நற்பொழுதில் எவ்வளவோ மகா சௌந்தரியங்கள் நிறைந்து விளங்கும் இந்த சுந்தர காண்டத்தைப் படித்து மகிழ்வது கல்வியும் செல்வமும் தெய்வீக அருளும் தர வல்லதாகும். கம்பன், வால்மீகி, ஆகிய இரண்டு பெரிய மகாகவிகளும் சுந்தரகாண்டம் என்ற இந்தப் பெயரை இதில்வரும் நிகழ்ச்சிகளிலும் கதைப்பகுதியிலும் உள்ள கடவுட்டன்மை பொருந்திய அசாதாரண அழகுகருதியே இட்டிருக்க வேண்டும். இராமாயணம் ஒரு சுந்தரமான காவியமானாலும் அதிலும் சுந்தரம் மிகுந்து விளங்கும் இடம் சுந்தரகாண்டமே என்ற கருத்து இராமாயணத்தைப் பாடிய எல்லாக் கவிகளுக்கும் இருந்திருக்கிறது. சுந்தரகாண்டத்தின் பெயர்ப்பொருத்தம் இந்த நோக்கத்தோடு பார்க்கும் போது மந்திரசக்திவாய்ந்த ஒன்றாகத் தோன்றுகிறது. மேலும் இராமாயணக்கதையையே முடித்துக் கொடுக்கின்ற அளவு பெருமை வாய்ந்த ஒரு பாத்திரமாக அனுமன் இக்காண்டத்திலேயே நேயர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப் படுகின்றான். கடலைக் கடந்து செயலை முடித்துத் திருவடிதொழுது நற்செய்தி தரும் அனுமனின் முழுத் தொடர்புகொண்டே இக் காண்டத்தின் நிகழ்ச்சிகள் யாவும் நிகழ்கின்றன. இலங்கை நகரில் அவன் செய்யும் சாமர்த்தியமான போர்களில் [illegible] னிடம் அவனு[illegible] பக்தியின் ஆழம் வெளிபடுகிறது. அற்புதம், பிரமை, இவைகளோடு கூடிய ஒருவிதமான பேரழகும் அந்தச் செயல்களில் கலந்திருக்கிறது.

எனவே பலவகையாலும் புண்ணியமும் புனிதத்துவமும் பேரழகும் நிறைந்த ஒன்றாகும் தகுதி சுந்தர காண்டத்திற்கே உரியது. சுந்தரகாண்டச் செய்யுட்களில் கம்பனின் அழகு முத்திரை பளிச்சென்று மின்னுகிறது. சொல்வளத்தோடு பொருட் செறிவும் பொருந்தியவையே அவ்வளவு செய்யுட்களும். இராமாயணக் காப்பியத்தைக் கம்பன் தமிழ்ப்படுத்தியதே ஒரு சௌந்தரிய சிருஷ்டி. சுந்தரகாண்டத்தின் பெரிய வனப்பைக் காணும்போது அது மிகப்பெரிய உண்மையாக உயர்ந்துவிடுகிறது. படித்துப்படித்து வரமடைய வேண்டிய, "நினைத்தது கொடுக்கும் நிகரிலாத சக்தி" சுந்தரகாண்டத்திற்கு உண்டு.

———

அரசியல் அலை:

## அடுத்த தேர்தலுக்குப் படம் போடும் ஆர்வம்

### பாராளுமன்றம் என்றால் பூலோக கைலாயமா?

அரசியல் ஆழியில் அலை அடித்தபடியே யிருப்பது சகசம். ஆனாலும் இலங்கை அரசியற் கடலில் இப்படியாக ஒருபொழுதும் திரை திரண் டெழுந்ததில்லை. அதிலும் தமிழகத்தில் மோதுதல் மோசமான நிலைமை யடைந்துவிட்டது.

காட்டிற்குத் தொண்டாற்றுவது மேடைக்கூத்தில் நாடகம் நடத்துவதுதான் என்று இப்பொழுதுள்ள அரசியல்வாதிகள் எண்ணுகிறார்கள். தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் அழகு மொழிக்கு ஆபத்து வந்துவிட்டதென்று மட்டும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அதைத் தடுப்பதற்கு வழி என்னவென்றால் தங்கள் தாய் மொழியை மறைக்க உரிமை பேசும் மற்ற மொழியாளருடன் ஒற்றுமையாய் அவர்கள் உரைப்பதனை உற்றுக் கேட்டு உடம்பாடாய் இருப்பதுதான் என்று நாட்டிலும் மொழியிலும் அபிமான மின்றிப் பேசுகிறார்களே.

அவ்வளவு தானா? அரசியலிற் பங்கு, உரிமை வழியின்றி வளைத்து வழிப்படுத்தும் வகையிலுள்ளதாய் இருப்பதைத் தமிழகம் இகழ்ந்து விடும் என்பதையறிந்தும் ததாஸ்து போடுவோர் தாயகத்திற்குப் பெருந் துரோகம் நினைத்துச் செய்கிறவர்கள் போலத் தங்கள் அரசியல் நாடகத்தை ஆடல் பாடலுடன் நடத்தி வருகின்றார்களே!

தமிழகத்தின் விதியிதுதானா......? தாயகத்திற்காக ஓயாதுழைக்கின்றோம் என்று வாயாரச் சொல்லித் திரியும் இவர்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையாயிருக்கக் கூடாதா? எல்லாரும் அரசியல் ஞானிகளாம் — பரோபகாரிகளாம் — நாட்டின் வீரர்களாம். நானே வீரன் என்றாற் போதாதா? மற்றையவர்களிலே வசை மாரி பாடவேண்டுமாம்! இதுதானும் தமிழகம் ஒற்றுமைப்படுவதற்கும ஒருங்குநின்றுழைப்பதற்கும் வழியாம்.

பாராளுமன்றத்திலே தமிழ் பேசும் அங்கத்தவர்கள் அத்தனைபேரும் சிங்காசனப்பேச்சுப்பற்றி நிகழவிருக்கும் விவாதத்தில் தமிழும் - சிங்களமும எவ்விதத்திலும் இலங்கை யெங்கணும் சம உரிமையுள்ள அரசகரிசைமொழிகள் என்ற கூற்று அரசியல் அமைப்பில் அழுத்தத் திருத்தமாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென்ற திருத்தப் பிரேரணையில் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதில் இருந்து உண்மைப் பரோபகாரிகள் யார் யார் என்பது அதிர் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்க வரும்.

———

## கோவாபற்றி கிறிஸ்தவ பத்திரிகையின் கருத்து

கலாநிதி சலசார் தமது கொள்கையை இனியாயினும் மாற்றக்கூடுமென்று நினைப்பது அளவுக்கு மிஞ்சிய எண்ணமாயிருக்கமாட்டாது. கோவா மக்கள் தங்களை அன்னியரென்று நினையாது இயல்பாக இந்தியாவுக்குச் சென்று குடியேறுகின்றனர் என்பது கோவா இந்தியாவோடு இணைவதில் அவர்களுக்கு எதிர்ப்பில்லை என்பதை அத்தாட்சிப்பண்ணுகின்றது. பல்வேறுவகைப்பட்ட மக்கள் இந்தியாவில் ஒரே தேசீயவுணர்ச்சியுடன் வாழ்தலே இதற்கு நியாயமாகும். போர்த்துக்கேயருக்கு இதுபோதிய நியாயமாய்த் தோன்றுவிட்டால் கோவா பிசுப்பாண்டவருக்குக் கீழ் இந்தியாவில் கிறிஸ்துவம் எப்படி வளர்ந்து வருகின்றதென்பதை அவர்கள் பார்க்கட்டும். கோவாவிலுள்ள கிறிஸ்தவ கலாசாரத்தை இந்து இந்தியா அழித்துவிடுமென்று [illegible] கிறிஸ்து சமயத்திற்கு அபாயங்கள் இந்தியாவிலே இருக்கின்றன என்பது உண்மை; ஆனால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள அபாயங்களிலு மிருந்து அவை கூடியவை அல்ல. உண்மையில் கிறிஸ்த மேல் நாட்டிலேயே மிகப் பெரும் துன்பங்கள் கிறிஸ்துவத்துக்குச் செய்யப்பட்டன. இங்குமங்கும் இந்தியாவில் சில துவேஷக்காரரிருந்தபோதிலும இந்தியாவுக்கு இயல்பாகவே அமைந்த பொறுமை நிலைக்குமென்று நம்பலாம். ஆகையினாலே கோவா இந்தியாவோடு இணைவதுபற்றிக் கோவா மக்கள் அஞ்சவில்லை. இவ்வுண்மையை இந்தியாவுடன் கோவா இணையும் துறையில் எவ்வளவு விரைவில போர்த்துக்கல் உணருகின்றதோ அவ்வளவுக்கு அது யாவருக்கும் இன்பம பயப்பதாகும் என்று கராச்சியிலிருந்து வெளியாகும் கிறிஸ்தவ குரல் என்னும் கத்தோலிக்க பத்திரிகை கூறுகின்றது.

———

## பாக்கிஸ்தானுக்கு அமெரிக்க உதவி

அமெரிக்கா பாக்கிஸ்தானுக்குக் கொடுக்கும் இராணுவ உதவி இப்பொழுது கொடுப்பதிலும மிக அதிகமாக விருக்குமென்று பாக்கிஸ்தான் முதல் மந்திரி ஸ்ரீ முகமது அலி கூறினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஸ்ரீ ஆனி மீ ௧0 உ வெள்ளிக்கிழமை

## உருத்திரபுரம் திருத்தொண்டு

தமிழகப் பண்டைநாட் பண்பாடு சைவச் சால்பை அடிப்படையாகக்கொண்டிருப்பதை ஆங்காங்குள்ள சிவாலய அமைப்பிலிருந்து அறியலாம். தொன்று தொட்டுத் தமிழகத்திற் சைவமதம் நிலவியிருந்ததை வரலாறுகள் தரும் உண்மைகள் சான்றுப்படுத்துகின்றன. இத்தகையபழய பெருமை வாய்ந்த உருத்திரபுரத்திலே ஒரு சிவாலயம் இருந்ததை அறிந்த சில சைவ அன்பர்கள் அக்கோவிலை வேத சிவாகம முறைப்படி புதுக்கி யமைக்க முயன்றுவருவதை நாம் பாராட்டுகின்றோம்.

இறைவழிபாட்டில் இறையளவேனும் எண்ணமில்லாத இக்காலத்திளைஞர்களை அரசியலிற் புகுத்திவிடும் கட்சிகள் மலிந்துவரும் வேளையிலே திருக்கோயிற்பணி செவ்வனே நடைபெறுவதற்குரிய முறையிலே தொண்டாற்றுவதே பெரிதும் வேண்டப்படுகின்றதென்று விளம்பவும் வேண்டுங்கொல். இயற்கைவேறுபாடுகள் யாவும் திருவருளின்படியே தோற்றுகின்றனவென்னும் உண்மையை மாணக்கர்கள் மறக்கும் வகையிலே கல்வி பயிற்றும் ஆசிரியர்கள் பலர் உளர். இன்னோர் கிரகண காலங்களை விஞ்ஞான விசேட வேளைகள் என்றும் அப்பொழுது புண்ணியப் புனல் ஆடுவதும் பரிபூரணப் பெருமானைப் பணிந்து வழிபடுதலும் வேண்டப்படாதெனவென்றும் இளைஞர்கள் உள்ளத்திற் பதிய வைக்கின்றார்களாம். என்னே கல்விச் செருக்கினால் இருண்ட இவர்கள் மதி! 'வருந்தான் வருந்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரி' என்ற பொய்யாமொழியையேனும் இவர்கள் பொருட்படுத்தமாட்டார்களா........? 'பிறப்பென்னும் பேதைமைநீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதன்றோ அறிவு?

திருக்கோயிற் பணிசெய்வாரே தேசத்தொண்டராவார். மக்கள் வாழ்க்கையை மறவிருட் படலத்தினின்றும் இழுத்தெடுத்து ஒழுக்க வழியில விடுப்பதற்கு ஊர்கடோறும் ஆலயங்கள் நன்கு அமைக்கப்படல்வேண்டும். இத்தொண்டில் ஈடுபடுபவர்கள் 'யாம் ஈசன் பணி அலதொன்றிலா' வீரர்களாயிருத்தல்வேண்டும். ஆலயப் பணியில் அரசியற்கருத்துக்களையும் விபரீதவளக்கங்களையும் புகுத்தி மக்கள்உள்ளத்திற்குழப்பத்தை உண்டுபண்ணுபவர்கள் திருத்தொண்டர்கள் ஆகார்

எனவே திருக்கேதீச்சரம், திருகம்காணேச்சரம், உருத்திரபுரம் ஆதியாம் புண்ணிய புனித நிலையங்களில் நடைபெறும் திருப்பணி வேலைகளில் சைவ அன்பர்கள் இடைபடுமுறைப்பதை நாம ஆதரிக்கின்றோம்- தமிழகச் சைவமக்கள் இப்பெருந் தொண்டிற் பங்கெடுத்துப் பயன் அடைவார்களாக.

# குருவாய் அமர்ந்த குகப்பெருமான் திருவருள்

ஸ்ரீ வ. குகசர்மா

ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் ஆறுமுகப் பெருமான் திருக்கைலாச மலையின் ஒரு பாங்கரில் தமது துணைவராகிய வீரவாகு தேவர் முதலியோர் சூழ வீற்றிருந்தருளினர். பிரமதேவன் முதலியதேவர்கள் யாவரும் சிவபிரானை வணங்கி மீண்டு வந்தார்கள். மீண்டு வரும் சமயம் குழந்தை உருக்கொண்ட குமரக்கடவுளைத் தேவர் யாவரும் போற்றினர். தேவர்களாயினுமென் மானிடராயினுமென் இறைவனை வணங்கும்போது யான் எனது என்னும் செருக்கறுத்து வணங்கவேண்டும். அப்போது தேவஉலகத்திலும் உயர்ந்த உலகம் ஒன்று கிடைக்கும். இதையே "யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம் புகும்" எனக்கூறினார் தெய்வப் புலவர். இவ்வாறான அகந்தை பிரமதேவர் மனதிலிருப்பதை எல்லார் மனத்தையும் அறியும் குமரக் கடவுள் கவனித்தார். பிரமதேவனைத் தம்முன் வரும்படி அழைத்தார். பிரமதேவர் சென்றார். அகந்தை அவரின் அகக் கண்ணை மறைத்தது. குழந்தை உருவம் கொண்டு குலவும் முருகப்பெருமானை வீழ்ந்து வணங்க மனம்வரவில்லை "ஏதமில் குழவி போல வான் யாவையுமுணர்ந்தான் சீரும் போதமுமழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்' என்று முன்பு சிவபெருமானால் கூறியருளப்பட்டவாகவைப் பிரமதேவனால் நினைக்க முடியவில்லை. அக்குழந்தை தன்னிலும் சிறியன் என்ற எண்ணமே மனதில் உதித்திருக்க வேண்டும். உருவம் வேறு உள்ள வுயர்வுவேறு என்பதை வேதங்களை உணர்ந்த பிரமாவால் சிந்திக்க முடியாது போய்விட்டது "உருவுகண்டெள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க்கச்சாணியன்னாருடைத்து" என்கின்றது திருக்குறள். முருகப்பெருமான், அழைத்தவுடன் முன்னேசென்ற பிரமதேவர் என்ன செய்தார்? ஏகியே பங்கயாசனத்தினோன் பணிந்திடாது தொழுதலும்" என்கிறார் நூலாசிரியர். இறைவனை வணங்கும் முறைப்படி வணங்காமல் ஏதோ கடமைக்கு கைகூப்பி நமஸ்காரம் செய்தான். முருகவேள் முறுவல் செய்து 'உனது தொழில் என்ன என்றுவினவினார். அதற்கு நான்முகன் "உலகமெல்லாம் படைப்பேன்" என்றான். "அவ்வாறாயின் உனக்கு வேதங்கள் நன்றாய் வருமே? என்று கேட்டார் முருகப்பெருமான். "சிவபெருமானுடைய அருளால் வேதங்கள் உணர்ந்துடையேன்" என நான்முகன் சற்று அகந்தையுடனே பதில் அளித்தான் அவற்றுள் ஒரு இருக்கு வேதத்தைச் சொல்லும்படி முருகப் பெருமான் கட்டளையிட்டார். அவ்வாறே பிரமதேவர் சொல்லத் தொடங்கி முதலில் வேதங்களில் முதலில் உச்சரிக்கப்படுவதாகிய பிரணவத்தை ஓதினன். அவ்வளவில் முருகப்பெருமான் பிரமன் அப்பாற் சொல்வதைத் தடுத்து முதல் ஓதிய பிரணவத்தின் பொருளைக் கூறும்படி கேட்டார். பிரமனுக்கு அதன் பொருள் தெரியவில்லை. அகந்தை கொண்ட உள்ளம் அலையத் தொடங்கியது. இதிலே "கடலேயனையம்யாம் கல்வியாலெனும் அடலேறனைய செருக்காழ்த்தி' என்ற பெரிய உண்மையை புராணிகர் புகுத்துகிறார்.

"தாமலைக் கலா மாதிபு மந்த
முனு சொல்லுமெனப்படு மோரெ
முத துண்மையை யுணரான், மாமலர்ப் பெருங் கடவுளு மயங்கினு
னென்றால நாமினிச சில வறிந்தன
மென்பது நகையே"

என்பது புராண வாக்கு.

பிரமதேவரின் தலை நான்கும் குலுங்கும்படியாக முருகப்பெருமான் குட்டினார். சிறையில் வைத்தார். தானே பிரமதேவராது சிருட்டித் தொழிலை ஒரு கையில் கமண்டலம் தாங்கியும் ஒரு கையில உருத்திராக்க வடம் தரித்தும வரதமோ டபயகரம் தாங்கியும நடத்தினார்.

பின்பு [illegible] சிவபெருமானின் விருப்பிற்கிணங்கி பிரமதேவரைச் சிறையினின்றும் நீக்கியருளினார். பிரமதேவர் சிவபெருமானைப் பார்த்து "ஐயவுன புதல்வனுற் றிய விதண்ட, மேதமன்றுணர்வு நல்கி யானெனு மகந்தை வீட்டித் தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனிதமென்றான்'

இதன்பின் சிவபெருமானின் கேள்விப்படி குடிலையென்னும் ஓரெழுத்தின் உண்மையை மறைவிதிப்படி உபதேசித்தாரெனப் புராணம் கூறும். அருணகிரியாருக்கு இக் குருநாத வடிவமே அருள் புரிந்தவரென்பர். எனவே,

"உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவாயுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே'

என நாமும் முருகப்பெருமானைத் துதித்து அகந்தையை நீக்கி அவனருள் பெற்று உய்வோமாக.

### அளவெட்டி
### சதானந்தவித்தியாசாலைச்
# சுகாதார விழா

அளவெட்டி சதானந்த வித்தியாசாலைச் சுகாதார விழாக்கொண்டாட்டம் ஆனி மாதம் 15-ந் திகதி மேற்படி பாடசாலை மண்டபத்தில் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் அவர்கள் தமது முன்னுரையில் சுகவாழ்வின் அத்தியாவசியத்தையும் சுகத்தைப் பேணும் முறைகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். பாடசாலை மாணவ மாணவிகளால் சுகாதார விடயத்தையொட்டிப் பேச்சு, பாட்டு, நடித்தல் என்பன நிகழ்த்தப்பட்டன. அவை சுகாதார அறிவைப் புகட்டியதோடு பலரின் மனதைக் கவர்ந்து பாராட்டுதலையும் பெற்றன.

சிக்கனமான வாழ்க்கையில சுகாதார வாழ்க்கை முறையை நடாத்த முடியும். கூட்டுப் பசளை தயாரிக்கும் முறையால் வீட்டுப்புறச்சுத்தத்தை ஆக்கலாம். வீட்டுத் தோட்டத்தை ஆக்குவதால் ஐந்து வருடத் திட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ரூபாவை மிச்சம் பிடிப்பதோடு, சிவசத்துள்ள உணவையும் பெறலாம். சுயமரியாதையைப் பாதுகாக்கவேண்டிய ஆவலும் சுய ஆற்றலும் இருந்தால் மலசல கூடத்தை அமைத்து விடலாம். இவ்வாறு உடுவில் பகுதிச் சுகாதாரப் பரிசோதகர், திரு முத்தையா அவர்கள் "கிராமச் சுகாதாரம்" என்னும் பொருள் பற்றிப் பேசிய விரிவுரையிற் குறிப்பிட்டார். அன்னார் தொடர்ந்து பேசுகையில் வீடு, கிணறு, குப்பைக் குழி, வீட்டுத் தோட்டம், மலசல கூடம் என்பவற்றிலேயே கிராமச் சுகாதாரம் தங்கியுள்ளதெனவும் கூறினர்.

---

## யாழ். விவாக இலாபநிதிச் சங்கம்

மேற்படி சங்கத்தின் மூன்றாவது மாதாந்தக் கூட்டம் உயர்தரக் கலை மன்றத்தில் 11-6-55 சனிக்கிழமை மாலை தலைவர் திரு. ஆ. தனபாலசிங்கமவர்கள தலைமையில் ஆரம்பமாயிற்று. அகில இலங்கையிலும் ஒற்றுமையை நிலைநாட்டும் நோக்கமாக இச்சங்கத்தைஸ்தாபித்தோம். ஆனால் இதுவரையும் முஸ்லிம்களும தமிழர்களும் மாத்திரமே அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந்தியச் சகோதரர்களும், சிங்களச் சகோதரர்களும் இதுவரை இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேராததையிட்டுமிகவும் கவலைப்படவேண்டியிருக்கின்றது என்று தலைவரும் ஏனைய பேச்சாளர்களும்குறிப்பிட்டுயாவரையும்ஒற்றுமையாய் அங்கத்தவராகி உழைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

ஏனைய சங்கங்களில் நம்பிக்கையீனம் உண்டானதுபோல் இதிலுண்டாக இடமில்லை என்பதற்குப் பலநியாயங்கள் அத்தருணம் எடுத்துக்காட்டப்பட்டன.

ஸ்ரீமதி சு. கந்தையா, ஸ்ரீமதி க. ஜெகதாம்பாள், ஸ்ரீமதி கே. சுந்தரம், ஸ்ரீசெ.பஸ்தியாம்பிள்ளை, திரு. ஈ. வி. கார்த்திகேசு ஆகியோர் "ஒற்றுமை" என்னும் விஷயப்பற்றிப் பேசினர்.

---

## தலைமை ஆசிரியரின் தடுமாற்றமான உபதேசம்

மட்டக்களப்பு அரசாங்க ஆசிரிய கலாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ பி சவிரிமுத்து மட்டக்களப்பு வின்சென்ற் பெண் பாடசாலைக் கூட்டமொன்றிலே பேசும்போது காலப்போக்கின் தன்மையைப் பார்க்கும்போது அப்பாடசாலைப்பழைய பெண் மாணவிகள் சிங்கள மொழியைக் கற்றுச் சிங்கள ஆண்களை மணஞ் செய்தலே நன்மையானதாயிருக்குமென்று சென்னாராம். அப்பாடசாலைத் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி ஏ. பதமன் பேசும்போது ஸ்ரீ சவிரிமுத்துவின் மதிமொழியில் வாக்கெடுப்பதானால் அதைப் பலர் ஆதரிக்கமாட்டார்களென்று கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுர் சிந்தனைச் சிறு மன்றம்

# பாட்டாவும்—பட்சமுள்ள பேரப்பிள்ளைகளும்

பாலர் பகுதிப் பாட்டன் பார்வையில்

ஆரா அன்பிற்குரிய பேரப்பிள்ளைகளே!

அறுபத்தாருவது ஆண்டு சென்ற சாதன நங்கையின் பாலர்களுக்கு அநுபவ மிக்க பாட்டன் வழிகாட்டியாயிருப்பது பொருத்தமானதல்லவா? பாட்டன் என்ருல் அநுபவப் பண்பாடுடையவர் என்று சொல்லாமலே அமையும் என்று உங்கள் பாட்டாவே உங்களுக்கு உரைக்கின்ருர். செம்மை நெறிகாட்டும் சைவமும் தித்திக்கும் செந்தமிழும் இம் மன்றத்திற் கமழா நிற்பதற்கும் நீங்களே பொறுப்புடையவர்கள் ஆகின்றீர்கள் என்று ஆசிமொழி கூறிப் பாட்டா பாலகர்களுக்கு ஒரு மன்றம் திறவுகின்ருர்.

# மார்க்கண்டேயர்

காசி என்ற ஊரினயலிலுள்ள கடகம் என்னும் பட்டணத்தில் மிருகண்டு எனும் பிராமணர் ஒருவர் இருந்தார். அவருக்கு நெடுநாளாகப் பிள்ளையில்லாமலிருந்தது. அவர் காசிக்குச் சென்று மணிகர்ணிகை என்னும் கோயிலேயடைந்து பிள்ளைப் பேற்றை விரும்பிச் சிவபெருமானை இடையருது வணங்கி வந்தார். ஒருநாள் சுவாமி தோன்றி உனக்கு கோயில்லாததாய், நன்ருகப் படிக்கக்கூடியதாய் நல்ல குணமுள்ளதாய், என்னிலே மிகுந்த அன்பு உடையதாய் பதினுறு வயதுள்ளதாய் ஒரு பிள்ளை பிறக்கும் என்று அருளிச் செய்தார்.

அக்காலத்தில் அவருடைய மனைவியார் கருப்பவதியாகி ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தார். அந்தப்பிள்ளைக்கு மார்க்கண்டேயரெனப் பெயரிட்டனர். அவருக்கு ஐந்து வயதானதும் பூணூலிட்டுப் படிக்க வைத்தனர். அப்பிள்ளை கற்க வேண்டிய நூல்களெல்லாவற்றையும் கொஞ்சக் காலத்தில் வெகு திறமையாகப் படித்து முடித்தார். பின்பு வேத ஆகமங்களையும் அதன் பொருளையும் உணர்ந்து சிவபெருமானில் மிகுந்த அன்புடையவராயினர். ஒவ்வொருநாளும் சிவபெருமானையும் சிவனடியார்களையும், தாய்தகப்பனையும் வணங்கித் தம்முடையகடன்களைத் தவருது ஒழுங்காகச் செய்துவந்தார்.

மார்க்கண்டேயருக்குபதினுறு வயது தொடங்கியதும் தாயும் தந்தையும் அவரைக் காணும்பொழுது துக்கப்பட்டு வருந்தினுர்கள். அப்பொழுது அவர் வணங்கி, நீங்கள் ஏன் இப்படி வருந்துகிறீர்கள் என வினவினுர். அப்பொழுது அவர்கள மகனே உனக்கு வயசு பதினுறு என்று சிவபெருமான் அருளிச் செய்தார். இப்போது உனக்கு அவ்வயசு வந்துவிட்டபடியால் நாங்கள் துன்பப்படுகின்ருேம் என்றனர். உடனே அவர், நீங்கள் ஒன்றுக்கும்பயப்படவேண்டாம். நான் சிவபூசை செய்து அதன் பலனுல் மரணத்தை வெல்லுகிறேன் என்று கூறி மணிகர்ணிகை என்ற கோவிலுக்குச் சென்று சிவபூசை செய்து நெடுநாளாக வணங்கி வருவாராயினுர். ஒருநாள் இறைவன் அவருக்குத் தோன்றி 'நீ மிகுந்த அன்போடு பூசை செய்கிருய் ஆகலால் உனக்கு விரும்பியதைத் தருவோம்' என்ருர். அதற்கு மார்க்கண்டேயர் 'மரணத்துக்கு அகப்படாமல் என்னைக் காத்தருள வேண்டும்' என்ருர். நீ பயப்படாதே; நீ செய்த சிவபூசையின் பயனுல் உன்னுடைய சரீரம் அழியாத் தன்மையடைந்திருக்கிறது' என்று அருளிச் செய்தார். இதனுல் மார்க்கண்டேயர் சிவபூசைசெய்து மரணத்தினின்றும் தப்பினுர் தாய் தந்தையர் அளவிலா ஆனந்தமடைந்தனர் என்பது அறிய வருகின்றது.

பொ. நகுலேசுவரி
244, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்




# எங்கள் தமிழ்

தமிழ்மொழி பிறந்த இடம்பொதியமலை. முதன் முதல் தமிழ் வளர்த்தவர் அகத்திய முனிவர். பின்னர் தொல்காப்பியரால் வளர்க்கப்பட்டது. இவர் இயற்றிய 'தொல்காப்பியம்' என்னும் நூலே தமிழ் மக்களது அரிய பொக்கிஷமாகும். தமிழ்மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூவகைப்படும். இதைப்போல் சிறந்த வேறொரு மொழியை உலகினிற் காணமுடியாது.

தமிழ் என்ருல் இனிமையுடையதென்றும், ஒப்பற்றதென்றும் பல பொருள்படும். இம்மொழி பண்டைக்காலத்தில் முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என்ற முச்சங்கங்களில் இருந்த புலவர்களால் வளர்ச்சி பெற்றது. பின்னர் சேர, சோழ, பாண்டியமன்னர்களாலபோற்றி வளர்க்கப்பட்டது. அக்கால மன்னர்கள் தமிழை வளர்க்க அரும்பாடுபட்டனர். அன்றியும் அவர்களும் அதனைக கற்றுப் புலமை பெற்றிருந்தனர்.

தமிழ் நூல்களுள், சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்களாகும்.

திருக்குறள், கம்பராமாயணம் என்பன உலக மக்கள் பலரால் போற்றப்படும் சிறந்த நூல்களாகும். திருக்குறள் உலகம் அனைத்தும்புகழும் ஒப்பற்ற நூலாக விளங்குகின்றது. இது பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் படிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் இந்தியாவில் அவதரித்த சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய பாட்டைக் கவனித்துப் பாருங்கள்.

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவ
தெங்கும் காணேம்
பாமரராய் விலங்குகளாய்
உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்
பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு வாழ்ந்திடுதல்
நன்ருே சொலீர்
தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்.

நாம் அறிந்த மொழிகளுள்ளே தமிழைப் போல் இனியது வேறு ஓரிடத்திலும் காணமுடியாது. அவ்வளவு இனிய நம் தாய் மொழியை விரும்பிக் கற்க வேண்டும். அதனை உலகமெங்கும் பரவச் செய்தல் வேண்டும்.

பொ. சந்திரசேகரம்
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

## ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனுர் 2-வது நினைவு நாள்

நிகழும் மன்மத வருஷம் ஆடி மீ 9-ம்நாள் (25-7-55) திங்கட்கிழமை வரும் அத்த நட்சத்திரத்தில் பகல் 11 மணிக்கு அகிலஇலங்கைச் சிவனடியார் சங்க ஆதரவில் மேற்படி நினைவுநாள் திருக்கேதீச்சரக் கோயிலில் திருவருட்துணை கொண்டு கொண்டாடப்படும் என்று அகில இலங்கைச் சிவனடியார் சங்கச் செயலாளர் திரு செ. கோவிந்தசாமி அறியத் தருகின்ருர்.

## அரிசி மிகுதி

நெல் உற்பத்தி சென்ற ஆண்டிலுமிருந்து இவ்வாண்டு ஏறக்குறைய இருமடங்கானமையினுல் வருகிற ஆண்டு நெல் இறக்குமதியை அதிகம குறைக்க வேண்டுமாம். இப்பொழுது இறக்குமதி செய்த அரிசியை எந்தநாட்டுக்காயினும் ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றதாம்.

## காரைநகர் சைவமகாசபை

நிகழும் வைகாசி மாதம் உசு-ந் உ (7-6-55) செவ்வாய்க்கிழமை பிற்பகல் மேற்படி சபை மண்டபத்தில் திருஞானசம்பந்த மூர்த்திநாயனரின் குருபூசை நடைபெற்றது. அவ்வமயம் பண்டிதர் சு. இராமசாமி அவர்கள், சம்பந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரத்தை எடுத்துரைத்து அவர்கள் செய்த அற்புதத்தைப் பாராட்டி சைவசமயிகள் நியமமாகச் செபிக்க வேண்டிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஒவ்வொருவரும் தவருது செபிக்க வேண்டுமென வற்புறுத்தி வைத்தார்கள்.

## காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நிகழும் வைகாசி மாதம் 20 உ (3-6-55) திகதி வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத்தின்போது மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற உற்சவ காலத்தில், முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல் புரிசை சு. முருகேச முதலியார் அவர்களால் சிறந்த பின்னணி இசையுடன் "முருகன் திருவிளையாடல்" என்னும்விஷயம்பற்றி சிறந்த பிரசங்கம் செய்யப்பெற்றது. பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் குறிப்புரை கூறினுர்.

## ஸ்ரீலஸ்ரீ தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள்

இப்பெருந்தகையார் யாழ்ப்பாணத்து வயாவி என்னுமூரில் சைவவேளாளர் குலத்திற் பிறந்தவர். இளமையிலேயே சகல சாஸ்திரங்களையும் கற்றுப் பாண்டித்தியமுடையவராய் இருந்தார். பின் தனது தாய்நாடாகிய இலங்கையை விட்டகன்று இந்தியாவுக்குச் சென்றனர்.

இந்தியாவில் பல தலங்களையும் யாத்திரை செய்து சிதம்பரத்தை அடைந்தார். அங்கு யாழ்ப்பாணத் தவசிரேட்டர் ஞானப்பிரகாச சுவாமிகளை யடைந்து அவரைக் குருவாகக் கொண்டு மந்திரகஷாயம் பூண்டு சந்நியாசியானுர்.

பின் வேதாரணியத்துக்குச் சென்று வேதாரணியேஸ்வரருடைய பழைய செங்கல் திருப்பணியாலயத்தை நீக்கி கருங்கல் திருப்பணி ஆலயமாக அமைத்தார். தஞ்சாவூர் மன்னனது ஏகபுதல்வியின் மாற்ற முடியாத நோயை விபூதி கொண்டு மாற்றினுர். அதனுல் அரசன் மூவாயிரம வேலி நிலங்களையும் உப்பளங்களையும் வேதாரணியேஸ்வரருக்கு [illegible] பட்டர் திருவாரூர் தியாகராசப்பெருமானுக்குத் தேரொன்றையும் செய்து கொடுத்தனர். அத்தேர் இன்றுமுளது. இத்தகைய சைவத் தொண்டரும் சைவ சித்தாந்த உண்மை நிலையைக் கற்றுத் தெளிந்தவரும் அருட்செல்வருமாகிய தம்பிரானவர்கள் வேதாரணியத்தில் சமாதிகொண்டருளினர்.

இவரது திருநாளைச் சைவர்கள் வருடந்தோறும் கொண்டாடித் தியானிப்பார்களாக.

செ. கோ.

## நாலாயிரம் தொழிலாளர் வேண்டுவது

கஷ்டநிவாரணத் திட்டத்தின் கீழ் வேலைசெய்யும் நாலாயிரம் தொழிலாளர் தங்களுக்கு நிலையான வேலை தரும்படி தொழில் மந்திரியையும் முதல் மந்திரியையும் கேட்டிருக்கின்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் நினைவு விழா

## கலாநிதி சனசமூக நிலையத்தில்

ஏழாலை தெற்கு கலாநிதி சனசமூக நிலையத்தில் புகை பிரதஸ்தான அதிபாராயிருந்து இளைப்பாறிய திரு. பொ. தம்பிப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஆனிமீ 5உ ஞாயிற்றுக்கிழமை திருவள்ளுவர் விழா நடைபெற்றது. தலைவர் குறிப்புரையில் திருவள்ளுவர் பண்டைய ஞானிகளிலொருவராகவும் கவியில்கம்பனுக்கு ஒப்பிடும் கூறினார். மேலும் பேசும்போது வள்ளுவன் என்பது அரசன் கட்டளைகளை மக்கட்கு வெளியிடுகின்ற கருமத் தலைவனுக்குள்ள உத்தியோகப் பெயர். பழங்காலமுதல் இவர் உத்தியோகப் பெயரினாலேயே அறியப்படுகின்றார். பிற்காலத்தில் வள்ளுவர் எனனும் பெயர் பறைக்குலத்தினரின ஒரு பிரிவினரைக் குறிக்கவும் வழங்குவதாயிற்று. அதனால் இவர் பறைக்குலத்தைச் சேர்ந்தவரெனக் கற்பனை செய்து இவர் பிறப்பைப்பற்றி ஒவ்வாத பல கட்டுக் கதைகளைச் சிலர் எழுதி வைப்பாராயினர். அந்தக்காலத்தில் சாதிகுலமென்றபிரிவுஇல்லை இந்துசாஸ்திரங்களின்படி எங்கள் சமூகம மூன்றுவகுப்பாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றதாக அறிகிறோம். படைத்தலுக்குரிய வராகிய பிரமாவின் தலையிலிருந்து பிராமணர்களும் (Priests from the head of Brahma) கைகளிலிருந்து இராசவீரர்களும் (Warriors from his arms) கால்களிலிருந்து குடிசனங்களும் (settlers from his legs) என்று கூறினார். பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்கள வள்ளுவன் கண்ட பெண்மை என்னும பொருள்பற்றியும், திரு. V. பொன்னம்பலம் M A. அவர்களும், திரு. T. திருநாவுக்கரசு அவர்களும வள்ளுவர் அரசியலைப்பற்றியும் பேசும்போது, இலங்கையில் சிங்களத்திலும் தமிழ் அதிகம் பழமையான தென்றும், இந்நாட்டின் சரித்திரத்தில் எல்லாக் காலங்களிலும் இவ்விரு மொழிகளும் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. இரு மொழிகளும சரிசம அந்தஸ்தை வகிக்குமென்று அரசாங்கமும் பல சந்தர்ப்பங்களில்வாக்குறுதியளித்திருப்பதோடு, இதை உறுதிப்படுத்த அவசியமானால் அரசியல் திட்டத்தையே திருத்துவேனென்றும பிரதம மந்திரி யாழ்ப்பாணத்தில் விஜயம் செய்தபொழுது வாக்களித்தாரென்றும் அப்படியிருந்தும் தமிழை ஒதுக்கித்தள்ளிச் சிங்களத்தை நாட்டின் ஒரே தேசிய மொழியாக்கப் பல வழிகளிலும் மறைமுகமாக முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கூறினர்கள். கடைசியாகத் திரு. மா. குமாரசுவாமி அவர்கள திருவள்ளுவரின் சரித்திரத்தைக் கதாப்பிரசங்கமாக நடாத்தினர். ஏராளமான மக்கள் சமுகங்கொடுத்தார்கள். கூட்டம் 11 மணியளவில் கடவுள் வணக்கத்துடன் முடிந்தது.

## சதானந்த வித்தியாசாலையில்

சதானந்த வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி பாடசாலை ஆசிரியர் திரு. இ. முருகேசு அவர்களின் தலைமையில் இவ்விழா கொண்டாடப்பட்டது. பாடசாலை மாணவர்களின் பேச்சுக்களும், பாட்டுக்களும், கட்டுரைகளும் வள்ளுவரின் வாழ்க்கை இலட்சியங்களை எடுத்துக் காட்டின. தலைவர் தமது தலைமைப் பேருரையில் வையத்தை வாழவைத்த வள்ளுவரை நினைவுகூரவேண்டியதன் அவசியத்தையும் வள்ளுவரின்வாழ்க்கை இலட்சியங்களையும் தெளிவுபடுத்திக கூறினர். பின்பு ஆசிரியர் திரு. மு. செல்லையா அவர்கள் "வள்ளுவமும் மாணவரும்" என்னும் விடயம்பற்றிப் பேசும போது வள்ளுவன் கூறிய நீதிகளை கம்பராமாயணத்தோடு தொடர்புறுத்தி விளக்கினர். ஆசிரியை ஆ. செல்லம்மா அவர்கள் 'வள்ளுவர் பெருமை' என்னும பொருள்பற்றிப் பேசினர். ஆசிரியர் திரு ச. சச்சிதானந்தம், செல்வன் வை. சுப்பிரமணியம், செல்வி இ. இராசபூபதி என்போர் குறிப்புரை கூறினர்.

## சங்கானை திருக்குறள் மன்றத்தில்

கடந்த ஞாயிறு (12-6-55) சங்கானை திருக்குறள் மன்றத்தாரால் இவ்விழா வள்ளுவர் அரங்கில் பண்டிதர் திரு. சி. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ம. மருதலிங்கம் தமது தொடக்கவுரையில் இன்று நாடெங்கும் ஒரு நன்னாளாகும். முன்னைத் தமிழ் மக்களெல்லாம் யாக்கை நிலையாமையை எண்ணிப்போலும உலகில் என்றும் உயிரோடு வாழ்ந்து நிலைப்பதற்குரிய பயனுடைய செயல்களை நலன் தரும் நல்ல நூல்களை ஆக்கினர்கள். அன்று தமிழ்நாடு எவ்வாறு பண்பட்டிருந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய இன்பத் தமிழ் நாடாம சென்னையிலுள்ள திருமயிலையிலே இணையிலாத் தமிழ் இனத்திலே, தமிழ் மரபிலே வள்ளுவர் பிறந்தார். வள்ளுவர் ஒரு பெருங்கல் மக்களை நலவழிப்படுத்துப மாண்புறு செயலினர்.

> வள்ளுவன் தன்னை உலகினுக்கே [தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்றார்பாரதியார் எனக கூறித் திருக்குறளின் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையையும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னத்தம்பி சரவணமுத்து
சிவியாதெரு
வழக்காளி

இல. 11827

எதிராக

கவிரியல் யோசேப்பு பாசையூர்
யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 1.827ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ளு ஆவணி மீ 13உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிவிபரம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குழியில் விளாம்குளம் வல் விளாம்குளம் எனனும் காணி கி. இ. 4 குழி 10 3/4 வீடும் கிணறு வான் பயிர் செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு கந்தர் சின்னத்தம்பி கந்தையாவின் ஆதனம்.

வடக்கு றோட்டு

மேற்கு கை ஒழுங்கை,

தெற்கு குளம்

இவை அடங்கலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்,
15-6-55

M 66 24-6 (து 100)

## காரைநகர் சிவகாமி சமேத சிதம்பரேசுவரர் கோயில மகோற்சவ ஆரம்பம்

மேற்படி கோயிலில் ஆனி மாதம் 4ந் தேதி (18 6-55) சனிக்கிழமை கொடியேற்ற விழாவும், விழாக் காலங்களில் சிவகாமி அம்பாள் பிரார்த்தனைச் சபையினரால் தேவாரமாதிய திருமுறைகள் ஓதுதலும் தொடர்ந்து பததுநாளும சைவாகம முறைப்படி திருவிழாக்களும், ஆனி மீ 12உ (26-6-55) ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் அன்றிரவு சிதம்பரேசுவரருக்கு அபிஷேகமும 13உ ஆனி உத்தர தரிசனமும் தீர்த்தோற்சவமும நடைபெறும்.

எடுத்துக் காட்டினார். பின்பு தாய்நாட்டிலும்சேய் நாட்டிலுமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்தார்.

தலைவரவர்கள் வள்ளுவரின் தெள்ளிய கருத்துக்களை பல செய்யுட்களில் இசையோடு எடுத்துக் காட்டினார்.

திருவாளர்கள் மு. சுப்பிரமணியம, பொ. நாகரத்தினம், மு. சிவானந்தம், த, தங்கராசா, சி. சுந்தரலிங்கம், நா. இராசலிங்கம் ஆகியோர் வள்ளுவரைப்பற்றிச் சொற்பொழிவுகளாற்றினார்கள்.

# காயகற்பம்?

## திடகாத்திரத்துடன் நெடுங்காலம் வாழ வழி

காயகற்பமாவதியாது என்று பலரும் அறிய விரும்புகிறார்கள். காயகற்பமாவது ஒரு மனிதன் தனது உடம்பை உணவு வகைகளாலும் மருந்துவகைகளாலும் திடகாத்திரத்தொடு நெடுங்காலத்துக்குச் சீவிக்கச் செய்வதாம். இவற்றில் உணவு வகைகளில் அடங்கியதை யாவரும் இலகுவாய் அறியலாம் இனி, காயகற்ப மருந்து வகைகளால் உடம்பைத் திடப்படுத்துவது அவசிய

காயகற்ப வைத்தியர்
ஸ்ரீ தாமோதரம்பிள்ளை அவர்கள்

மான விஷயம். அது முக்கிய கருவியாக விசேட பெலத்தோடு உடம்பைத் திடப்படுத்தி வாழ்நாளை நீடிக்கச் செய்யும் சக்தி உடையது என்று ஆயுள் வேத வைத்தியம் கூறுகின்றது.

அப்படி உடம்பைத் திடப்படுத்தும்மருந்து வகைகள் அநேகம் உள. அவை ஆயுள்வேத வைத்தியத்திலும் சித்தர் வைத்தியத்திலும சொல்லப்பட்டு இருக்கின்றன. அவையாவன:—

விவனர்கற்பம், காலனைக் கொன்றோன், விதியை விலக்கி, எமனைக் கொன்றோன், சஞ்சீவி யுண்டை, ஆயுள் நீட்டி, கிழட்டுக்குமாரன். சீவிய சகதி, அமுத பாணி, நரசிங்கக் கிருதம், தேவா அமுதம், அமுத சஞ்சீவி: சாகா கற்பம், இளமைநாட்டி, கிழநீக்கி, வாலிபசக்தி, சீவா அமுதம், மலைமாணிக்கம், சீவக சிந்தாமணி, இளமை பேர்த்தி, யோகிகற்பம், வீராதிவீரன். இவற்றுடன் இன்னும் பல இருக்கின்றன. இப்பெயர்களே அவற்றின குணங்களைக் குறிக்கின்றன.

மேலும் நாம் அறிய வேண்டியது ஒருவருடைய விதி இன்னதென்று விஷயம நடக்கமுன் தெரியாது. ஆகையால் இம்மருந்தைச சாப்பிட்டு 100, 120, 150 அல்லது கூடிய காலத்துக்கு ஒருவன் இருப்பான என்று அவன் விதியிருக்கலாம. ஆகவே மதியால் செய்யக்கூடியவை யாவையும் செய்ய வேண்டியது மனிதன் கடமையாகும்.

எங்கள் சமய நூல்களில் சொல்லியிருப்பதன்படி அநேகர் 100, 200, 300 வருஷங்களுக்குச் சீவித்திருக்கிறார்கள்; அதுபோல எங்களுக்கும் ஏன் விதியிருக்கமாட்டாது? எவற்றையும் விதி என்று சொல்லித் தனது வாழ்நாளை ஒருவன் இழப்பான். வேறு ஒருவன தன் சீவியத்தை வழக்கம் போல் நடத்தி வரும்பொழுது அவனுக்கு நோய்வந்தால் வழக்கமான வைத்தியத்தைச் செய்வித்து மாற்றித் தன் உடம்பின் பலத்தை வளராது வந்தால் அவனுடைய இருதயம் (Heart) தன் வேலைகளைச் செய்யும் சக்தி குன்றிப் பிற்காலத்தில் நின்றுவிடும். இது சடுதி மரணம் என்பர். காயகற்ப மருந்துகள் உடம்பைப் பலப்படுத்தும் சக்தி உள்ளது அது இருதயம், சுவாசப்பை, நரம்பு, மூளை ஆகியவைகளுக்கு விசேஷ பலத்தைக கொடுத்து உயிர் வாழ்க்கையை நடத்திவரும்.

விதியின் தன்மைகளை அறிந்த முற்கால வைத்திய நிபுணர்களே ஆயுளை நீடிக்கச்செய்து திடகாத்திரத்துடன் வாழும் பொருட்டு இமமருந்துகளைச் சொன்னார்கள். இவ்வுண்மையை அறிந்து இந்த அரிய மருந்துகளை உட்கொண்டு திடகாத்திரத்துடன் நெடுங் காலம் மக்கள் இன்புற்று வாழ்வார்களாக.

## நெல் வாங்கும் திட்டம்

உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நெல் வாங்குவதற்கு விவசாய மந்திரி ஒரு புதிய திட்டம் அமைத்திருக்கின்றார். அதன்படி விவசாய விற்பனைச் சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்நாடுகளில் நெல்லை விலைக்கு வாங்கும். நெல் உத்தரவாத விலை பன்னிரண்டு ரூபாவாயிருந்தபோதிலும் நெல்லின தன்மைக்குத் தக்கபடி ரூபா 8-75 வரையில் விலை குறைக்கப்படும். இத திட்டம வருகிறமாசம நடைமுறையில வருமாம்.

## காரைநகர் சிதம்பரேசுவரர் பிள்ளையார் சுப்பிரமணியர் விக்கிரகங்கள்

புதன்முறையாக மகோற்சவம தொடங்கும் இக்கோவிலுக்கு சைவப் பெரியார்கள் திரு. க. கந்தசு, திரு. கு. செல்லையா ஆகியோர்கள பிள்ளையார், சுப்பிரமணியர் ஆலயங்களைக் கட்டுவித்தது மலலாது பிள்ளையார், சுப்பிரமணியர், வள்ளியம்மை, தெய்வயானை அம்மன் விக்கிரகங்களையும் உதவியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் என்றால் என்ன?

——0—0——

புதுச்சேரியைச் சேர்ந்த வில்லியனூரில் மாணவர் கூட்டமொன்றில் ஸ்ரீ அபேல்க் ளோவிஸ் 'சட்டம் என்றால் என்ன?' என்பது பற்றிப் பேசினர். அவர் பேசும்போது

நான் சட்டம் முழுமையுந் தெரிந்தவன் என்று சொல்ல முடியாது சட்டம் இருட்டைப்போன்றது தான் எனக்குத் தெரியும். சட்டம் படித்தேன். வக்கீலாயிருந்தேன். சட்டக்கல்லூரி ஆசிரியனாயிருக்கிறேன். நீதிபதியாயிருக்கிறேன். ஆனாலும் சட்டத்தை முழுமையும் அறிந்தவனல்ல. சட்டம் என்று எழுதப்பட்டுவந்தபோதிலும் மனிதனுக்குத்தானே மனச்சாட்சி என்ற ஒன்றும் இருக்கிறது. சட்டம் என்ற ஒன்று உலகில் நெடுநாளாய் இருந்து வருகிறது. மக்களுடைய கட்டுப்பாட்டை, ஒழுங்கை எழுத்துவாயிலாக எழுதிவைக்கப்பட்டுள்ளதே இன்று சட்டம் என வழங்கப்படுகிறது. நாம் பிறர்களு இடைஞ்சல் செய்தல்கூடாது. பிறரும நமக்கு இடைஞ்சல் கொடுக்கத்கூடாது. இதுதான் சட்டம். சில்லறைக் குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளை மாணவர்களாகிய நீங்கள் அறியவேண்டும். சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருபவர்கள் தளவாடிசியே இவர்கள் மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள மக்களையும் சார்ந்துள்ளது. பயனற்ற முறையில் குற்றங்கள் கிராமங்களிலேதான் மலிந்துள்ளன. சிறிய தவறு கிராமத்தில் ஏற்பட்டால் நாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும். சமாசத்தைச் சேர்ந்தவர்களாகிற மாணவர்கள் சமாதானமாகப் போகும்படி கிராமத்தாரைத் தூண்ட வேண்டும். சிறைச்சாலையைக் குற்றவாளிகளுக்கு இருப்பிடமாக இல்லாமல் அவர்களைச் சீர்திருத்தும் கூடமாக ஆக்கலாம் என்று கூறினர்.

— தமிழ்நாடு

நேயர்கள் நெஞ்சம்

# அந்தணர் பிராமணரல்ல

"அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

அந்தணர் என்போர் அறவோர். அவர்கள் செந்தண்மை பூண்டு ஒழுகுவோர் (செந் - சிவப்பு, தெளிவு; தண்மை — குளிர்ச்சி, சாந்தம், இன்பம், மென்மை) தெளிவும், சாந்தமும், என்னேரமும் இன்பமும், மென்மையான மனமும், பிற உயிர்களிடத்து இரக்கமும் அருளும உடையவரே அந்தணராவார். 'பிராமணர்' என்பது வடமொழி. அந்தணர்-தமிழ் மொழி. பிராமணர் ஒரு தனிச் சாதியினர், மற்ற மூவருணத்தினரும் பிராமணராக முடியாது. "தமிழ் அந்தணர் தனிச்சாதியினரல்லர், வேளாளர், அரசர், வணிகர், என்னும் வகுப்பினரில் இல்லறம் நடத்தி, காமம் தீர்ந்த காலத்துக் குடும்பதலை மக்களிடம் ஒப்படைத்துவிட்டுப் பொதுநலம்புரியும் பெரியோர்களே 'அந்தணர்' ஆவர் எனத் தொல்காப்பியர், பொருளதிகாரக் கற்பியல் 51-ம் சூத்திரத்தில் கூறுகிருர். அந்தணர் - துறந்தார் - நீத்தார்

திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் பற்பல விடங்களில் வலிந்து பொருள் கொண்டும், மனுதரும சாத்திரங்களைப் புகுத்தியுமுள்ளார். தமிழரின் அறநூலுக்கும் ஆரியப் பிராமணரின் மனுதருமத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. அந்தணர் என்பதற்குப் பிராமணர் என்றபொருள் பிற்காலத்தில் ஏற்பட்டது.

ஆரியப் பிராமணரைத் தமிழ்ப் பெயரால் அந்தணர் என்று கூறுவதே பிழை. பிராமணர் பிரமாவின் முகத்திலுதித்த முதற் சாதியினர். 'தமிழ் அந்தணர் துறவறத்தினர். தனிச்சாதியினரல்லர். மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர். இல்லறந் துறந்து பொது நலம் புரிபவர், தீய ஒழுக்கம இல்லாதவர். அளவற்ற பெருமையும் உயிர்களிடத்து அருளுடையவர். குணம் என்னும் குன்றேறி நின்றோர். சினத்தை வென்றவர். செயற்கருஞ் செயல் செய்பவர். கொலை செய்வதை அறவே நீக்கியவர்."

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும்
ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

இதன் பொருள் என்னையோ வெனில், "அரசன் முறை செய்யாவிட்டால் அறவோரின நூல்களைப் போற்றுவோரும் அறத்தைக்கடைப் பிடித்து நடப்போரும் நாட்டில் குறைவர். ஆதலால அவ் விரண்டிற்கும அடிப்படையாயிருப்பது மன்னவன் கோல்' என்பதே. செங்கோல் நடைபெறாவிட்டால் அறவோர் அற நூற்களைச் செய்யவும் முடியாது. இவ்வாறு உண்மைக் கருத்தினை நீக்கி, 'அந்தணன் - பிராமணன்; அறம் - வேதங்கள் கூறும அறம' என்று பொருள் கோடல் பிழையாகும.

'அற ஆழி அந்தணன்' என்ற சொற்றொடரில கண்ணால் காணமுடியாத இறைவனை உணருமபடி செய்கிருர் வள்ளுவர். அறம - தருமம், ஆழி - சமுத்திரம், அந்தணன் - அறம் ஓதுவோன. 'அற ஆழி அந்தணன்' என்றால் 'தருமக் கடலாகிய அந்தணன் — அறமே உருவமானவர் என்பதே. அறததைக் காணமுடியாது ஆனல் உணரலாம். அதுபோல, அறமே உருவமான, அறம் ஓதுவதே தொழிலான இறைவனை — உலகமுதல்வனை — குறிப்பிடுகிருர் வள்ளுவர்.

திருவள்ளுவர் 'அந்தணரின் இயல்பை 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தில் கூறுகின்றமையினுலும அந்தணர் என்போர் தமிழ் நாட்டுத் துறவிகள் என்பது இனிது விளங்கும.

ப. இ தேவராசா

கொழும்பு,
19-6-55.

# அணிந்துரை அரங்கம்

(பயிற்சித் தமிழ்)
**Practical Tamil**
முதலாம் பாகம்

தென் புலோலியூர்
மு. கணபதிப்பிள்ளை

தாய்மொழியில் உயர்தரக் கல்வி பயிற்றப்படும் திட்டத்தைச் செவ்வன் நடைமுறையிற் கொணர்வதற்கு அம் மொழிப்பயிற்சிக்கான பாட புத்தகங்கள் இன்றியமையாது வேண்டப்படுகின்றன வென்றுணர்ந்த திரு. மு கணபதிப்பிள்ளையவர்கள் தமது அலுவலகத்திற் பெற்ற ஆராய்ச்சி அநுபவத்தையும் இயல்பாயமைந்துள்ள மொழிஅபிமான ஆற்றலையும் நன்கு பயன்படுத்தி இந் நூலை வெளியிட்டிருக்கின்றனர் ஆங்கில மொழிப்பயிற்சி நூல்கள் அமைந்துள்ளவகையில் எழுதப்பெற்ற இந்நூல் கலவிக் கழகங்களில் ஆசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் பெரிதும் உதவியாயிருக்கும் என்று சொல்லலாம். எழுத்து சொல் சொற்றொடர் என்ற முப்பிரிவுகளாய் வெளிவந்திருக்கும் முதலாம் பாகம் ஆசிரியரின் தமிழ்மொழி ஆர்வத்தை நன்கு புலப்படுத்துகின்றது.

விலை ரூபா 1-00.

x　　x　　x

திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா, சமயகுரவர் நால்வரந்தாதி, சேய்த்தொண்டர்போற்றிக் கலிவெண்பா.

ஆசிரியர் தேனூர் வே. செ. சொக்கலிங்கம் பிள்ளை துறையூர் திருச்சி ஜில்லா.

விலை அணு 12.
பெறுமிடம்: 1 பெருமாளைமா சின்னமடம் ஆதீன கர்த்தா துறையூர் திருச்சி ஜில்லா.

2 B கோவிந்தராவ் புத்தக வியாபாரம் துறையூர் திருச்சி ஜில்லா.

இது பல சாற்று கவிகளுடன் அழகுற அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.

## இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

—O—

சுன்னுகம் — காங்கேசன்துறை புகையிரத நிலையங்களுக்குமிடையில் உள்ள 254 மைல் 10 சங்கிலி 47 லிங்ஸ்சில் அமைக்கப்பட்டுள்ள புகையிரதக் கடவை 9—7—55 மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை (10—7—55) 6 மணி வரைக்கும் திருத்தப்படும். இக்கடவை 9—7—55 மாலை 10 மணி தொடக்கம் மறுநாட்காலை (10—7—55) 6 மணி வரைக்கும் எல்லாப் போக்குவரத்து வாகனங்களுக்கு முழுமையாக மூடப்பட்டிருக்கும்,

G 10 24 6

## யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

இச்சங்கப் பரீட்சைகளுக்காய இவ்வாண்டு விண்ணப்பப் பத்திரங்கள் ஆனி (யூன்) மாதம் 30ந் தேதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய விண்ணப்பங்கள் ஆடி (யூலை) மாதம் 15ந் தேதி வரையும் அனுப்பலாம். பரீட்சைக் கட்டணங்கள் வழமைபோல உரியனவாகும் என்று ஸ்ரீ K. அந்தோனிப்பிள்ளை காரியதரிசி அறிவித்தருகின்ருர்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 26-6-55 —— 2-7-55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும். உம்முடைய திட்டங்களை முன்னேற்றும். காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபங்களுக்கிடமுண்டு. கடைசி இரு நாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய நண்பரில அதிகம் தங்கவேண்டாம். உம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் வருத்தப்படுவீர் செலவதிகரிக்கும. இனத்தவர்களுடன் சண்டைகளுக்கு மிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம 1, 2, 3**

இந்தவாரம் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. சுரம் அல்லது வேறு நோய்கள் வர இடமுண்டு. கணநோய்களுக்கிடமுண்டு நீர் கோபங் கொள்ளுதலிலும் விரைவீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

செலவதிகரிக்கும். கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. குடும்பச் சூழலில சுகவீனம் உம்மை அதிகம் [illegible] [illegible] டாம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய நண்பர் உமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வர். அவர்களுடைய வாக்குறுதிகளில் அதிகம் தங்க வேண்டாம். சிறு அபாயங்களுக்கு இடமுண்டு உம்முடைய இனத்தவர்கள் சிலரோடு நீர் கோபிக்கக் கூடும்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

இந்தவாரம் உம்முடைய பகைவரை நீர் வெல்லக்கூடியதா யிருக்கும். நீர் முந்தி இழந்தவற்றைத் திருப்பிப் பெறுவீர். தனலாபமும் நண்பர்கள் மூத்த சகோதரர்கள் மூலம் உதவிகளும் நிச்சயம்.

**துலாம்சித்திரை 3, 4ம் பாதம். சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்**

இந்தவாரம் உம்முடைய பிதாவழி இனத்தவர் உமக்கு அதிக துன்பங்களை உண்டாகக்கூடும். பணநிலைமைகள் நல்லாயிருக்க மாட்டா. குடும்பச்சூழலில் சில புது செலவுகளுக்கிடமுண்டு. வார இறுதியில் முதிர்ந்த உத்தியோகத்தருடன வாக்கு வாதத்தைத் தவிர்க்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம பாதம் அநுஷம், கேட்டை.**

தேகசுகம் சிக்கலாகவேயிருக்கும். பணத்துறை நல்லாயிருக்கும். நண்பர் உதவியாயிருப்பர். சில புது முயற்சிகள் உம்மைஅதிகம் வருத்தக் கூடும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

இந்தவாரம் குடும்ப சமாதானம் கொஞ்சமுமிருக்கமாட்டாது. குடும்பச் சூழம்பச்சூழலில் சில மரணங்களுக்குமிடமுண்டு பணத்துறையில நல்லவாரம். நீர் இழந்ததாகக் கைவிட்ட சிலதைத் திருப்பிப் பெறுவீர்.

**மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. வாரத்தில் முதல் இரு நாட்களிலும் வாழ்க்கைத் துணைவரோடு வாக்குவாதம் செய்வதைத் தவிர்த்தல் நன்று. பணத்துறையில் நல்லவாரம், சமூகசித்தியும் நிச்சயம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

புது முயற்சிகளுக்கு முன் அரைவாரம் நல்லாயிருக்க மாட்டாது. நீர் சில கண்டனங்களை முன்னிட வேண்டிவரக்கூடும். ஆனல் உம்முடைய கருமங்களில் நீர் வெற்றி பெறுவீர்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

முதன் மூன்று நாட்களும் வியாபார காரியங்களுக்கு நல்லனவாகும். புதன் வியாழனும் வெள்ளி காலையும் உம்மைச் சில ஆபத்திக்குள்ளாக்கக்கூடும். வார இறுதி திரும்பவும் நன்ருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்து ஆலய அறநிலையச் சட்டம்

—0—

இந்து ஆலய அறநிலையச் சட்ட திட்டம் அரசாங்க மேற்சபையிலிருந்து பிரதிநிதிகள் சபையின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது இந்த மாசம் 28-ம், 29-ம் தேதிகளில் பிரதிநிதிகள் சபையாரால் விவாதிக்கப்படுமாம்.

### கோவாவுக்குச் சென்ற பாராளுமன்றச் சத்தியாக்கிரகி

இந்திய பாராளுமன்ற அங்கத்தவர் ஸ்ரீ வி. ஜீ. தெஷ்பண்டே ஒரு தொகுதி சத்தியாக்கிரகிகளுடன் கோவாவுக்குட் புகுந்தார். யாவரும் கோவா பாதுகாவலரால் (பொலீசாரால்) அடிக்கப்பட்டுப் பலர் அரசாங்க வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர். ஸ்ரீ தெஷ்பண்டே எங்கு கொண்டுபோகப் பட்டாரென்பது தெரியாது.

### மிருசுவில் ஐ. தே. கட்சிக் கிளை

மிருசுவிலில் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளை ஒன்று அமைக்கப்பட்டது. அத்தருணம் ஸ்ரீ வி. குமாரசாமி பேசும்போது ஐக்கிய தேசியக்கட்சி ஒன்றே எல்லாச் சாதி சமயத்தவருடைய எண்ணங்களையும் நிறைவேற்றத் தக்கதென்றும் மந்திரி ஸ்ரீ சு. நடேசன் பேசும்போது தமிழுக்கோ தமிழ்க் கலாசாரத்துக்கோ பாதகமான எதையும் மந்திரிசபை கண்ணுற் பார்க்கவும் மாட்டாது என்றும் கூறினார்கள்.

# சூரிய கிரகண இன்ப துன்பங்கள்

சிகிரியாவில் சூரியகிரகணம் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. பல நூற்றுக்கணக்கானோர் அதைப் பார்த்துக் களித்தார்கள். அமெரிக்க விஞ்ஞானிகள் ஆர்வத்துடன் அவதானத்து இன்புற்றனர். இது பல இடங்களில் தெளிவாயிருக்கவில்லை. கொழும்பில் கிரகணத்தை மேகங்கள் மறைத்துவிட்டன. கிரகணநேரத்தில் தெகிவலை மிருகசாலையிலுள்ள மிருகங்கள் ஆரவாரித்தனவாம். முகத்துவாரப் பகுதியில் ஒரு கோழி கறுப்பு முட்டை இட்டதாம்.

கிரகண காலத்தில் மருந்துண்டு சுகம்பெற நினைத்தோர் பலர் பெரும் அவலப்பட்டார்களாம். அரசாங்க வைத்தியசாலைகளுக்குப் பல ஆயிரக்கணக்கானோர் இயல்பாகவே சுகவீனமுண்டாகிச் சென்றார்களாம். கிரகண நேரத்தில் மாத்திரையில் இருவர் சடுதியாக விழுந்து இறந்தார்களாம். கொழும்பு கண் வைத்தியசாலைக்குக் கட்பார்வை இழந்த 24 வயது வாலிபன் ஒருவர் போனாராம். பார்வை பலவாறு பழுதுபட்டோர் மிகப்பலர்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமயத்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகளை செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



உ

சிதம்பரம், ஸ்ரீ நடராசப்பெருமான் திருக்கோயில் திருப்பணி

# மஹா கும்பாபிஷேகம்

மன்மத ஞு ஆனிமீ உ௩ உ (7—7—55) வியாழக்கிழமை

பஞ்சலிங்கத் தலங்களுள் ஆகாசலிங்கத் தலமாக எங்கள் தாய்நாடாகிய பரத கண்டத்தின்கண் விளங்குவது தில்லையாகும். இது சோழநாட்டிலுள்ளது. கோயிற்புராணம், சிதம்பரபுராணம், தில்லைவன புராணம், ஏமசபாநாத புராணம், புண்டரீகபுராணம் முதலிய நூல்களில் இந்தத் தலத்தின் மான்மியங்களைப் பரக்கக் காணலாம். சிவஸ் தலங்களுள் "கோயில" என்ற சிறப்புப் பெயரையும் பெற்றது இத்தலமேயாகும். தேவர்கள் வியாக்கிரபாதர், பதஞ்சலிமுனிவர், திருமுறையாசிரியர்கள், வேந்தர், அமைச்சர் பொதுமக்கள் யாவரும் இத்தலத்தின் கண் நடராஜப்பெருமான் புரியும் ஆனந்தக்கூத்தினைத் தரிசித்து இம்மை மறுமை இன்பங்களை அடைந்தனர். தரிசிக்க முத்தியளிப்பதும் இத்தலமேயாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்கோயிலுக்கு 63 ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை புனருத்தாரணஞ்செய்து மகாகும்பாபிஷேகம் செய்தல் சாத்திரவிதியாகும். அவ்விதியைப் பின்பற்றி இவ்வாலயத்தில் சிறுசில இடங்களில் திருப்பணி செய்ய ஆன்றோர்கள் ஒரு "கும்பாபிஷேக சபை"யை நிறுவியுள்ளார்கள். திருவருளை முன்னிட்டு ஷை சபை கும்பாபிஷேகத்தைத் நாளது மன்மத ஆண்டு ஆனித் திங்கள் உ௩ உ (7-7-55) வியாழக்கிழமையன்று நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் இக் கும்பாபிஷேகத்துக்கு பணம் ரூபா 101/= உதவத் தீர்மானஞ் செய்து சபைத் தனாதிகாரி அண்மையில சிதம்பர யாத்திரைக்குச் சென்றிருந்தபொழுது அப் பணத்தை, கும்பாபிஷேக சபைப் பொக்கிஷாதிபதியிடம் நேரேயுதவினர். ஈழநாட்டிலிருந்து இந்தியாவுக்குப் பணம் அனுப்புதலை இக்கால அரசாங்கக் கட்டுப்பாடுகள் கஷ்டப்படுத்தியிருக்கின்றமையினால் ஷை கும்பாபிஷேகப் பொக்கிஷாதிபர் எங்கள் சபைத் தனாதிகாரியை இங்குள்ள சைவாபிமானிகள் உதவும் பணத்தைச் சேர்த்துத் தமக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டனர். ஆகையினால் ஈழநாட்டிலிருந்து ஷை கும்பாபிஷேகத்துக்குப் பணம் அனுப்ப விரும்பும் அபிமானிகள் தாங்கள் அனுப்ப விரும்பும் பணத்தினை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தனாதிகாரிக்கு 1-7-55 க்கு முன் அனுப்பி வைத்தால் அவர் அரசினரிடம் உத்தரவு பெற்றுச் சேரும் பணத்தை கும்பாபிஷேகச்சபைப் பொக்கிஷாதிபருக்கு அனுப்பி வைப்பார்

நடராசப்பெருமான் திருவடி வாழ்க!

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 16-5-55.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

M. 37 20, 27, 3—6—55.



பழனி ஆண்டவருக்கு அபிஷேகமான

# பஞ்சாமிர்தம்

பிரசாதங்கள் செலவு அடங்கிய பெட்டி 1-க்கு ரூ. 4-12-0

மற்ற விபரங்களுக்கு எழுதவும்

S. P. முத்து சுந்தரக் குருக்கள்
ஆண்டவர் கோவில் பூஜை பழனி


### காங்கேசன் துறையில் தமிழரசுக்கட்சி

தமிழரசுக்கட்சிக் கிளை ஒன்று காங்கேசன் துறையில் திறவப்பெற்றிருக்கின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வீதியில் நடந்த கூட்டமொன்றில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசும்போது தமிழரசுக்கட்சியின் கொள்கைகளைப் பழித்தவர்களே இப்பொழுது அக் கொள்கையை ஆதரிக்கிறார்களென்றும், திரு. அமிர்தலிங்கம் பேசும்போது தமிழர் அரசியற் சுதந்திரம் பெற வேண்டுமென்றும் இரு மொழிகளுக்கும் சமஉரிமை கொடுபடுமென்று சேர். ஜோன் கொத்தலாவல கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும், திரு. வன்னியசிங்கம் பேசும்போது தமிழ் மக்கள் அரசியல் பொருளாதாரத்துறைகளிற் பலவாறு பலவீனப்படுத்தப் படுகிறார்களென்றும் கூறினார்கள்.

### ஆங்கிலம் பற்றி உபவேந்தர் கருத்து

உபவேந்தர் சேர் நிகலஸ் ஆற்றிகல மகரகம கூட்டமொன்றிற் பேசும்போது குறைந்தது நூறு வருடங்களுக்காகினும் ஆங்கில மொழி எங்கள் நாட்டுக்குத் தேவை என்று கூறினராம்.

### நேரு புல்கானின் பேச்சு

உருசியாவின் பலவிடங்களைப் பண்டித நேரு மிகப் பரபரப்பாகப் பார்த்து வருகின்றாராம். அவர் இந்தியாவுக்குத் திரும்புவதன்முன் உருசிய முதல்மந்திரி புல்கானின் முதலியோருடன் உலக சமாதானம்பற்றி உறுதியான பேச்சு நடத்துவாராம்.

### திருக்கோணமலையில் ஐக்கிய முன்னணி

தமிழர் ஐக்கிய முன்னணி அமைக்கும் கூட்டங்கள் பல திருக்கோணமலையிலும் அதைச்சேர்ந்த இடங்களிலும் நடைபெற்றனவாம். திருக்கோணமலைக் கூட்டத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் திரு எஸ்.சரவணமுத்துவும் சமுகமளித்தனராம். தம்பலகாமக் கூட்டத்தில் ஸ்ரீ பொன்னம்பலம் பேசும்போது அரசாங்க உத்தியோகம் தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரந்தானென்றும் அது நூற்றுக்குப் பத்துவீதமளவில் தான் இருக்குமென்றும் கூறினராம்.


உ

புலஸ்தியபுர (பொலநறுவை)ச் சிவாலய

# ஆனி உத்தர யாத்திரை


மன்மத ஞு ஆனி கூ௩ உ (27—6—55) திங்கட்கிழமை ஆனி உத்தரத்திலன்று முற்காலத்தில் சோழமன்னர்களால் கட்டப்பட்டுச் சைவாகம முறைப்படி நித்திய நைமித்திகங்களுடன் விளங்கி இப்பொழுது இலமுற்றிருக்கும் புலஸ்தியபுரச் சிவாலயத்தில் வழமை போலப் பகல்ல விசேஷ அபிஷேகமும் ஆராதனையும் அன்னதானமும் பஜனையும் இரவில் கதாப்பிரசங்கமும் அலங்காரோற்சவமும் நடைபெறப் பொலனறுவையிலுள்ள புலஸ்தியபுரச் சைவ மகாஜன சபையார் ஒழுங்கு செய்திருக்கின்றார்கள். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் குறித்த தினத்திற்கு அவ்வாலயத்திற்குச் செல்ல ஒரு யாத்திரைக் கோஷ்டி ஒழுங்குசெய்யத் தீர்மானித்திருக்கின்றார்கள். அக் கோஷ்டியிற் சேர விரும்புகின்ற மக்களுக்கு ஒரு தனிப் பஸ் வண்டியை ஒழுங்கு செய்வார்கள். ஒரு ஆளுக்கு ரூபா 15 வரையில் போகவரப் பிரயாணச் செலவேற்படும். புலஸ்திய சைவ மகாஜன சபையார் யாத்திரைகாரர் தங்குவதற்கு வசதியான இடங்களும் உணவு வசதிகளும் செய்து வைப்பார்கள். அக் கோஷ்டியிற் சேர விரும்புகின்றவர்கள் தங்கள் பெயர்களையும் விலாசங்களையும் திரு. அ. வைதயல்பாகர் தொல்புரம் சுழிபுரம் என்ற விலாசத்துக்கு 24-6-55 க்கு முன் அனுப்பி வைப்பார்களாக.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

M. 57 10, 17, 24—6—55.







rinted and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai. Jaffna on Friday June, 24 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org